செய்தி வெளியீடு எண் : 927 நாள் : 15.05.2023

# செய்தி வெளியீடு

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் மிகவும் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (15.05.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசாணை வெளிடப்பட்ட அறிவிப்புகளுக்கு முழு செயல் வடிவம் கொடுத்து இத்திட்டங்களின் பயன் மக்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்திடுமாறும், அரசாணை வெளியிடப்பட வேண்டிய அறிவிப்புகளுக்கு உரிய கருத்துருக்களை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு. த.ஆனந்த், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர் திரு. எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in